ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# அடுக்கு பானையில் மெய்ப்பாடுகள்

22

**முனைவர் ஆ.செண்பகவள்ளி**

**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, (சுயநிதிப் பிரிவு)**

**ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரி,**

**குரோம்பேட்டை, சென்னை - 44**

**ஆய்வுச் சுருக்கம்**

புதுக்கவிதை என்பது இலக்கண வரம்பற்றது அத்தகைய புதுக்கவிதையான அடுக்குப் பானைக் கவிதைகளில் இலக்கண மெய்ப்பாடுகளை புகுத்திப் பார்ப்பது தான் இக்கட்டுரையின் நோக்கம்.

**கலைச்சொற்கள்:** புணரி – கடல்; குழவி – பெருமை; ஏமம் – களிப்பு; பனுவல் – நூல்; நித்திலம் – முத்து

**முன்னுரை**

பேச்சுமொழி தோன்றும் முன்னரே தன் கருத்தைப் பிறருக்கு உணர்த்த மனிதனுக்குப் பயன்பட்டவை மெய்ப்பாடுகளே ஆகும். மெய்பாடு என்ற சொல் தற்காலத்தில் சுவை என்ற பொருளைக் குறிக்கின்றது.

**நகையே அழுகை இளிவரல் மருட்கை**

**அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று**

**அப்பால் எட்டாம் மெய்ப்பாடு என்ப (தொ. மெய் 3)**

என்று மெய்ப்பாட்டிற்கு இலக்கணம் வகுத்து தந்துள்ளார் தொல்காப்பியர். மெய் - உடம்பு, பாடு – படுதல், தோன்றுதல் என்பதாகும் உள்ளத்துணர்ச்சிகளை மற்றவர்களுக்கு புலனாகுமாறு தோற்றுவித்தல் ஒருவரின் மெய்வேறுபாடு அறிந்து மற்றவர் ஒழுக வேண்டிய திறப்பாடு பற்றியே மெய்ப்பாட்டியலை அமைத்துள்ளார். இந்த மெய்ப்பாட்டை நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என எண்வகை மெய்ப்பாட்டை தொல்காப்பியர் கூறியுள்ளார். முனைவர் சுகந்தி அன்னத்தாயின் அடுக்குப் பானை என்ற கவிதை நூலில் உள்ள கவிதைகளில் எட்டு வகையான மெய்ப்பாட்டு உணர்வுகளை எவ்வாறு பயன்படுத்தியுள்ளார். என்பதை இக்கட்டுரையில் காணலாம்.

**நகை**

**சிரித்த முகத்துடன்**
**சிந்தை கவர்ந்தவளே - நீ**

**என் உயிர்த்தோழியே! (அடுக். பா. பக். 67)**

இக்கவிதையில் கல்லூரிக்கு செல்லும் முதல் நாளன்று தன்னை பார்த்தவுடன் புன்னகையுடன் வரவேற்றவள். தன் மனதை கவர்ந்தவளே தன்னுடைய உயிர்த்தோழியாக சிறந்து விளங்குகிறாள். சிரித்த முகத்துடன் மனதை கவரும் இடத்தில் நகை மெய்ப்பாடு தோன்றுகிறது.

**அடிச்சுக்கோ பிடிச்சுக்கோ**

**அத்தை மகனை கட்டிக்கோனு (அடுக். பா. பக். 35)**

என்ற கவிதை வரிகளில் இளமைப் பருவத்தில் ஊருக்கு வரும் அத்தையின் குட்டிப் பையனுடன் ஒப்பிட்டு கருப்பாக இருக்கும் தனது அண்ணன் மகளைப் பார்த்து அத்தை மகனை கட்டிக்கொள் என்று எள்ளி நகையாடுவதில் நகை மெய்ப்பாட்டினைக் காணமுடிகிறது.

**ஓட்டப்பல்லு சங்கரா**

**ஒரு வீட்டுக்கும் போகாதேனு (அடுக். பா. பக். 34)**

என்ற வரிகளில் சிறுபிள்ளைப் பருவத்தில் ஆறுவயதே ஆன பக்கத்துவீட்டு ஆறுமுகம் பல்லு விழுந்துவிட்டதால் ஒளிந்து, மறைந்து பார்க்கும் பொழுது அவனை எள்ளி நகையாடி விளையாட்டாய் உணர்வை வெளிக்காட்டுகிறார் இக்கவிஞர்.

**அழுகை**

**உன் முகம் பார்க்கத்தானோ**
**எம் புருசன் உயிரை**
**இறைவனும் எடுத்தானோ (அடுக். பா. பக். 70)**

இக்கவிதையில் கல்லூரிகால நண்பர்களாகவும், பக்கத்து ஊர் தோழியாகவும் சில ஆண்டுகள் பிரியாதவர்கள், திருமணத்திற்கு பிறகு பல ஆண்டுகள் பிரிகிறார்கள் அப்படிப்பட்ட வேலையில் தனது தோழியின் கணவர் எல்லையில் இறந்தபின் காண வரும் பொழுது அவள் அழுகையை வெளிப்படுத்தி அழுகை மெய்ப்பாட்டை வெளிக்காட்டியுள்ளார் இந்நூலசிரியர்.

**காய்ப் பறிக்க நித்தம்**
**கல்லால் அடித்த**
**சாலையோரப் புளியமரமோ**
**சாய்ந்தழ ஆதரவு தந்தது! (அடுக். பா. பக். 53)**

மே மாதத்தில் பள்ளியில் தேர்வு முடிவுகள் வந்தபொழுது அதில் நான் தோல்வி அடைந்தேன். பள்ளிக்கு வெளியே வந்து புளிய மரத்தின் மீது சாய்ந்து அழுவதற்கு மரம் ஆதரவு தந்தது என்னுமிடத்தில் அழுகை மெய்ப்பாட்டை காணமுடிகிறது.

**இளிவரல்**

**நோயில் விழுந்தபோது தோளில்**
**சுமந்தவளும் நீதான்! (அடுக். பா. பக். 53)**

இந்த வரிகளில் தன் பிள்ளைக்கு நோய் ஏற்பட்டு படுக்கும்பொழுது தன் அன்னை அவளை தோளில் சுமந்து, அந்த நோயிலில் இருந்து மீட்டு எடுக்கிறாள் என்பதில் இளிவரல் என்னும் மெய்ப்பாட்டின் உட்கூறான பிணி என்னும் மெய்ப்பாட்டை கவிஞர் கையாண்டுள்ளார்.

**தீவிரவாதத் தாக்குதலால்**
**சிதைந்துபோன வீரர்களும்**
**உன் கணவரும் ஒருவர் என**
**என் காதில் விழுந்த போது (அடுக். பா. பக். 70)**

இக்கவிதையில் விடுமுறைக்கு ஊருக்கு சென்று இருக்கும்பொழுது தான் தனது தோழியின் கணவர் எல்லையில் பணியில் இருந்த நிலையில் இறந்துவிட்டார். என்று கேள்விப்பட்டு, தனது தோழியின் நிலைக் கண்டு வருத்தத்துடன் இளிவரலின் உட்கூறான வருத்தம் என்ற மெய்ப்பாட்டை காணமுடிகிறது.

**மருட்கை**

**நீயே தங்கம்**
**உனக்கெதுக்குத் தங்கம் (அடுக். பா. பக். 77)**

என்ற வரிகளில் சிறுபிள்ளைப் பருவத்தில் காதில் கம்மல் அணிய ஆசைப்பட்டு தந்தையிடம் கேட்கும் பொழுதெல்லாம் அவர் நீயே தங்கம் உனக்கு எதற்கு தங்கம் என பெருமையாக கூறுமிடத்தில் மருட்கை மெய்ப்பாட்டின் உட்களனான பெருமை மெய்ப்பாட்டினை எடுத்துரைக்கிறார்.

**ஏரோப்பிளேன் சத்தம் கேட்டா**
**எட்டி வந்து வானம் பார்க்க (அடுக். பா. பக். 47)**

இக்கவிதையில் இளமைப் பருவத்தில் வானில் செல்லும் வானூர்தியின் சத்தம் புதுமையாக இருந்ததால், வீட்டிலிருந்து வெளியே வந்து வந்து ஒவ்வொரு முறையும் சத்தம் கேட்கும்போதெல்லாம் பார்க்கும் இடத்தில் மருட்கை மெய்ப்பாட்டின் உட்கூறான புதுமை மெய்ப்பாட்டின் வழி எடுத்துக்காட்டுகிறார் கவிஞர்.

**அச்சம்**

**கழற்றி கிடக்கும்**
**பாம்பு சட்டை பார்த்ததும்**
**பதறியடித்து ஓடியதும் (அடுக். பா. பக். 13)**

இக்கவிதை வரிகளில் விடுமுறை நாட்களில் பள்ளிப் பருவத்தில் நண்பர்களுடன் இலந்தை பழத்தைப் பறிக்கும் பொழுது பாம்புச் சட்டை கழட்டிவிட்டுச் சென்று இருப்பதைப் பார்த்து பயந்து செல்லும் இடத்தில் அச்சம் மெய்ப்பாட்டினை கையாண்டுயுள்ளார் இந்நூலசிரியர்.

**பூனைக்கு எட்டா வண்ணம்**
**பாலு தயிர் வெண்ணெய் நெய்யென (அடுக். பா. பக். 39)**

மேற்குறிப்பிட்ட வரிகளில் வீட்டில் பூனைகளுக்கு எட்டாதபடி உறியில் அடுக்கடுக்காக பானை கட்டி அதில் பால், தயிர், வெண்ணெய் என வீட்டில் வைத்திருப்பார்கள் அதை பூனைக்கு அஞ்சி அடுக்குப் பானையில் வைப்பதால் அச்சம் மெய்ப்பாட்டின் உட்களனான விலங்கே என்ற மெய்ப்பாடு தோன்றியுள்ளன.

**ஆனந்த நீராடலுக்கு**
**அடிகோலியவள் - இன்று**
**அஞ்சிடும் அரிப்பு நோய்க்கு**
**ஆளாக்குகிறாள்! (அடுக். பா. பக். 118)**

இந்தக் கவிதை வரிகளில் ஆற்று நீரில் குளிப்பதற்கு அன்று ஆனந்தமாய் இருக்கும். ஆனால் இன்று ஆலைக் கழுவுங்கள், சாயக் கழிவுகள் எனக் கலந்து பல அரிப்பு நோய்களுக்கு ஆளாவதால் அச்சம் கொண்டு குளிப்பதில்லை. என்று அச்சம் மெய்ப்பாட்டின் வழி கவிஞர் எடுத்துக்காட்டுகிறார்.

**பெருமிதம்**

**கல்வியெனும் கடலில்**
**கரைசேர உதவிடும்**
**கலங்கரை விளக்கு ஆசான் (அடுக். பா. பக். 109)**

இக்கவிதையில் ஆரம்பக் கல்வி முதல் ஆராய்ச்சி கல்வி வரை கற்பித்து கல்வி எனும் கடலில் தவிக்கும் மாணவர்களை கரைசேர கலங்கரை விளக்குபோல உள்ள ஆசிரியரின் பெருமிதம் என்ற மெய்ப்பாட்டினை இந்நூலாசிரியர் கையாண்டுயுள்ளார்.

**உதிரத்தைப் பாலாய்த்**
**தருபவள் அன்னை!**
**உணர்வைப் பாடமாய்த்**
**தருபவர் ஆசான்! (அடுக். பா. பக். 11)**

இந்த வரிகளில் தாயின் உன்னதத்தையும் ஆசிரியரின் அருமையும் எடுத்துரைத்து இரத்தத்தை தாய்ப்பாலாய் தரும் பெருமையையும், அனுபவத்தையும், கல்வியும் அறிவூட்டும் ஆசிரியரின் பெருமையையும் பெருமிதம் என்ற மெய்ப்பாட்டின் உட்களனான கல்வி என்ற மெய்ப்பாட்டினை விரிவாக கூறுகிறார்.

**பக்கத்து வீட்டு கருப்பசாமி**
**பலாப்பழம் சீசனில்**

**விற்பனைக்குச் செல்லும் முன்**

**இந்தாங்கோ தாயோ என (அடுக். பா. பக். 42)**

இக்கவிதை வரிகளில் பக்கத்து வீட்டுக்காரரின் வீட்டில் பலாப்பழ சீசனில் தூக்கு சட்டி நிறைய இந்தாங்கோ தாயோ என கூப்பிட்டு கொடுக்கும் கொடை உள்ளம் காணும் இடத்தில் பெருமிதம் மெய்ப்பாட்டின் உட்கூறான கொடை மெய்ப்பாட்டினை வெளிக்காட்டுகிறார்.

**விழுந்து எழுந்தாலும்**

**விடாமுயற்சியால்**

**தோற்பதில்லை**

**குழந்தைகள் (அடுக். பா. பக். 5)**

இக்கவிதையில் குழந்தைப் பருவத்தில் விளையாடும் பொழுது கீழே விழும் குழந்தைகள் மீண்டும் எழுந்து முயற்சிச் செய்து எழுந்து விளையாடுவார்கள் கீழே விழுந்தாலும் எழுந்து முயற்சிப்பதில் குழந்தைகளைப் பார்த்து பெருமிதம் கொண்டு இதில் பெருமிதம் மேம்பாட்டினை கவிஞர் எடுத்துரைக்கின்றார்.

**வெகுளி**

**சாலை விரிவாக்கத்தால்**
**சாய்ந்து போயிருந்தன**

**புளிய மரங்கள்! (அடுக். பா. பக். 115)**

இக்கவிதையில் நினைவு தெரிந்த நாள் முதல் சாலையின் இருபுறமும் கூடாரமாய் வரிசைக் கட்டி நின்ற புளிய மரங்கள் இன்று காணவில்லை. இன்று சாலை விரிவாக்கம் என்ற காரணத்தால் மரங்கள் சாய்ந்து கிடக்கின்றன. இதில் வெகுளி மெய்ப்பாட்டினை இந்நூலாசிரியர் கையாண்டுயுள்ளார்.

**நாடெல்லாம் விடுதலை**
**வேட்கை கொழுந்து விட**
**முதன் முதலில்**

**வீறு கொண்டு எழுந்தான்! (அடுக். பா. பக். 153)**

இக்கவிதையில் வளமான தமிழகத்தில் அந்நியர்கள் வரும்பொழுது இங்கு உள்ள செல்வங்களை சுரண்டி சென்றார்கள் இந்த அநீதியை எதிர்த்து கோபம் கொண்டு எதிர்த்த தலைவருள் ஒருவர் தான் பூலித்தேவன் அவரின் மூலம் வெகுளி மெய்ப்பாட்டு உணர்வு உச்சமடைந்துள்ளது.

**உவகை**

**கைவளையல் கலகலக்க**
**கால் கொலுசு சலசலக்க**
**காதோடு டோலாக்கு மெல்ல**

**காதலைத்தான் சொல்லுது புள்ள (அடுக். பா. பக். 92)**

இக்கவிதையில் காதலிக்கும் காதலியைப் பார்த்து அவள் வரும்பொழுது கைவளையல் ஓசையும், கொலுசின் ஓசையும், காதில் உள்ள கம்மலின் ஓசையும் உன் காதலை சொல்லுது நீ எப்போ சொல்ல போகிறாய் என்று உவகை மெய்ப்பாட்டின் வழி உணர்த்துகிறார்.

**மட்டை சீவி விளையாடலாம்**

**கட்டை வண்டி செய்திடலாம் (அடுக். பா. பக். 119)**

இக்கவிதை வரிகளில் பனை மரத்திலிருந்து கிடைக்கும் மட்டையை வைத்து சிறுவர்களுக்கு விளையாட்டு பொருட்கள் செய்யலாம். பனை நுங்கு சாப்பிட்ட நுங்கு வண்டி, மற்றும் மரத்தில் கட்டை

வண்டியும் செய்து விளையாடலாம் இந்த விளையாட்டு மூலம் ஏற்படும் இன்பத்தின் வழி உவகை மெய்ப்பாட்டை காணலாம்.

**ஓலை கிழிச்சி முள்ளு செருகி**

**காத்தாடி செஞ்சு சுத்தியதும் (அடுக். பா. பக். 21)**

இக்கவிதை வரிகளில் பனை மரத்தின் காய்ந்த ஓலையிலே காத்தாடி செய்து அதில் கருவேல மரத்தின் முள் செருகி விளையாடுவதன் மூலம் ஏற்படும் இன்பத்தின் வழியாக உவகை மெய்ப்பாடு சுற்றி வீசுகின்றன. பலவகையான விளையாட்டுகளை கூறி மெய்ப்பாட்டினை எடுத்து கையாண்டுள்ளார்.

**முடிவுரை**

முடிவாக இக்கட்டுரையில் கவிஞர் சுகந்தி அன்னத்தாய் அவர்களின் அடுக்குப்பானை என்ற கவிதை நூலில் இடம்பெறும் எட்டு வகையான மெய்ப்பாட்டு உணர்ச்சிகளைக் கற்போர்க்கு புலப்படுத்தும் விதமாக கவிதைகளில் உறவுகள் வழியாகவும், வாழ்வியல் சார்ந்த செய்திகள் வழியாகவும், அன்றாடம் நடக்கக்கூடிய நிகழ்வையும், சாதராண வாக்கியங்களைக் கொண்டு கவிதையில் உணர்வுப்பூர்வமாக அடுக்குப் பானை என்ற கவிதையில் ஏழு விதமான பானைகளைக் அடுக்கி காட்டியுள்ளதை போல, இந்நூலில் அமைந்துள்ள எட்டு வகையான மெய்ப்பாட்டு உணர்வுகளோடு கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

**துணைநூற் பட்டியல்**

1. தமிழண்ணல் – தொல்கப்பிய இலக்கியக் கொள்கைகள் மெய்ப்பாடு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, முதற்பதிப்பு -1986.
2. முனைவர் அ.சுகந்தி அன்னத்தாய் – அடுக்குப் பானை கவிதைகள், காவ்யா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு – 2023.